பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**21 02 2026 SATURDAY 7.15 PM**

ஆகாஷவாணி

## தலைப்புச் செய்திகள்

1. நாட்டின் வளர்ச்சிக்கு தனியார் நிறுவனங்களின் சமூக பொறுப்புணர்வு மிகவும் முக்கியமானது என்று குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

2. பிரதமர் திரு. நரேந்திர மோடி, மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்-கி-பாத் நிகழ்ச்சி, அகில இந்திய வானொலியில் நாளை காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

3. இந்தியா செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப உச்சிமாநாட்டின் பிரகடனம் இன்று வெளியிடப்பட்டது.

4. ரணஜன்னி, தொண்டை அடைப்பான் போன்ற நோய்களுக்கு எதிரான தடுப்பூசியை, மத்திய அமைச்சர் திரு ஜெ பி நட்டா இன்று அறிமுகம் செய்துவைத்தார்.

5. ஆசிய **Cross Country** தடகள சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Harmanjot Singh** வெள்ளிப்பதக்கம் வென்றார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<<<>>>>>

நாட்டின் வளர்ச்சிக்கு தனியார் நிறுவனங்களின் சமூக பொறுப்புணர்வு மிகவும் முக்கியமானது என்று குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இதுதொடர்பான தேசிய உச்சிமாநாட்டில் உரையாற்றிய அவர், பொதுக் கல்வி, அடிப்படை சுகாதாரம், திறன் மேம்பாடு உள்ளிட்ட பல்வேறு துறைகளை வலுப்படுத்த கார்ப்பரேட் சமூக பொறுப்புணர்வு முக்கிய பங்கு வகிப்பதாக கூறினார்.

கடந்த 10 ஆண்டுகளில் நாட்டில் கட்டமைப்புத் துறையின் விரிவாக்கம், டிஜிட்டல் இணைப்பு உள்ளிட்ட பல்வேறு நலத்திட்டங்கள் மூலம் கோடிக்கணக்கான மக்களை ஏழ்மையில் இருந்து மீட்டதாக தெரிவித்தார்.

இந்திய தற்போது உலகிலேயே நான்காவது பெரிய பொருளாதார நாடாக வளர்ச்சியடைந்துள்ளதாக திரு சி பி ராதாகிருஷ்ணன் குறிப்பிட்டார்.

<<<<<<<<>>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி, மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்-கி-பாத் நிகழ்ச்சி, அகில இந்திய வானொலியில் நாளை காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

நாட்டில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

பிரதமரின் உரை முடிந்தவுடன் அதன் தமிழாக்கத்தை சென்னை அகில இந்திய வானொலி ஒலிபரப்புகிறது.

இது, இரவு 8 மணிக்கு மறுஒலிபரப்பும் செய்யப்படுகிறது.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

<<<<<<<<>>>>>

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தில் உலகளாவிய ஒத்துழைப்பை உறுதி செய்யும் வகையில் இந்திய செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப தாக்கம் குறித்த உச்சிமாநாட்டின் பிரகடனம் இன்று வெளியிடப்பட்டது.

இந்த பிரகடனத்தில் 88 நாடுகள் மற்றும் சர்வதேச அமைப்புகள் கையெழுத்திட்டுள்ளன.

பொருளாதார வளர்ச்சி மற்றும் சமூக நலனுக்காக செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதற்கான விரிவான கருத்தொற்றுமை இந்த பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்திற்கான சர்வதேச ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது என்றும் இந்த பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<<<>>>>>>

ரணஜன்னி, தொண்டை அடைப்பான் போன்ற நோய்களுக்கு எதிரான தடுப்பூசியை, மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா இன்று அறிமுகம் செய்துவைத்தார்.

இமாச்சலப் பிரதேசத்தின் **Solan** மாவட்டம் **Kasauli** மத்திய ஆராய்ச்சி கல்விக் கழகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இதனை அவர் தொடங்கிவைத்தார்.

அப்போது பேசிய அவர், மருத்துவம் மற்றும் மருந்தகத் துறையில் இந்தியா உலகிலேயே முன்னணி நாடாக திகழ்வதாக தெரிவித்தார்.

**Kasauli** மத்திய ஆராய்ச்சி கல்விக் கழகம் வரும் ஏப்ரல் மாதத்திற்குள் **55** லட்சம் டோஸ் தடுப்பு மருந்துகள் உற்பத்தி செய்யும் என்று அவர் கூறினார்.

பிரதமர் திரு நரேந்திர மோடியின் சுயசார்பு இந்தியா திட்டத்தின்கீழ், இந்த தடுப்பூசி மத்திய ஆராய்ச்சி கல்விக்கழகத்தில் உருவாக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

உலகின் மருந்தகமாக இந்தியா சுகாதாரத்துறையில் வளர்ச்சியடைந்துள்ளதாக கூறிய திரு ஜெ பி நட்டா, நாட்டின் தடுப்பூசித் திட்டம் உலகிலேயே மிகப்பெரிய திட்டம் என்று குறிப்பிட்டார்.

<<<<<<<<>>>>>

அஸ்ஸாம் அடுத்த ஐந்தாண்டுகளில் நாட்டின் தொழில் மையமாக வளர்ச்சியடையும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

அம்மாநிலத்தின் **Kamrup** மாவட்டத்தில் அஸ்ஸாம் காவல்துறையின் புதிய முகாமுக்கு அடிக்கல் நாட்டி பேசிய அவர், அஸ்ஸாமின் வளர்ச்சிக்காக போதிய நிதியுதவி அளிக்கப்பட்டு வருவதாக கூறினார்.

கடந்த பத்தாண்டுகளில் பிஜேபி தலைமையிலான ஆட்சியில், அஸ்ஸாமில் சட்டம் — ஒழுங்கு மேம்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அஸ்ஸாம் மாநிலத்தின் மேம்பாட்டுக்காக **15** லட்சம் கோடி ரூபாயை மத்திய அரசு வழங்கியுள்ளதை திரு அமித் ஷா சுட்டிக்காட்டினார்.

<<<<<<<<>>>>>

திருப்பதியிலிருந்து, வளைகுடா நாடுகளுக்கு புதிய விமான சேவைகள் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளதாக மத்திய சிவில் விமான போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு ராம்மோகன் நாயுடு தெரிவித்துள்ளார்.

திருப்பதியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், திருப்பதி சர்வதேச விமான நிலையத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக கூறினார்.

திருப்பதியிலிருந்து ஷீரடிக்கு புதிய விமான சேவை தொடங்கப்பட உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

திருப்பதி வரும் பக்தர்களின் வசதிக்காக புதிய சர்வதேச மற்றும் உள்நாட்டு விமான சேவைகள் தொடங்கப்படும் என்று அவர் கூறினார்.

மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன், தாக்கல் செய்த நிதிநிலை அறிக்கையில் சிவில் விமான போக்குவரத்துத் துறைக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதாகவும், விமான நிலையங்களின் மேம்பாட்டுக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் திரு ராம்மோகன் நாயுடு தெரிவித்தார்.

<<<<<<<<>>>>>>

உலக தாய்மொழி தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி, எழுத்தாளர்கள் திரு அழகிய பெரியவன், கமலா சிவம், திரு ஆதிவள்ளியப்பன், ஆகியோர் இந்த தினத்தின் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைத்தனர்.

***(Sound Byte — எழுத்தாளர்கள் - 60 Sec.)***

<<<<<<<<>>>>>

உலக நாடுகளுக்கு இடையே கடல்சார் ஒத்துழைப்பு மிகவும் முக்கியமானது என்று இந்திய கடற்படை தலைமை தளபதி அட்மிரல் தினேஷ் கே திரிபாதி தெரிவித்துள்ளார்.

கோவா கடல்சார் மாநாட்டை தொடங்கி வைத்து பேசிய அவர், விசாகப்பட்டினத்தில் அண்மையில் நடைபெற்ற சர்வதேச படகுகளின் ஆய்வின் போது 74 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டதாக தெரிவித்தார்.

கடல்சார் பாதுகாப்பில் உலக நாடுகள் ஒருங்கிணைந்து செயல்படுவதற்கு இத்தகைய மாநாடு வழிவகை செய்யும் என்றும் அவர் கூறினார்.

உலகில் 70 சதவீதம் நீரால் சூழப்பட்டுள்ளதாக கூறிய அவர், நாட்டின் 95 சதவீத வர்த்தகம் கடல் வழியாக மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

இந்த மாநாட்டில் **14** நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்து கொள்வதாகவும், இந்திய பெருங்கடல் பகுதியில் கடல்சார் பாதுகாப்பு பிரச்சினை தொடர்பாக விரிவாக விவாதிக்கப்படும் என்றும் அட்மிரல் தினேஷ் கே திரிபாதி கூறினார்.

<<<<<<<<>>>>>

குவைத் நாட்டில் பணிபுரிபவர்களுக்கான புதிய **Freelance** விசா திட்டம் தொடங்கப்பட உள்ளதாக அந்நாட்டு துணை பிரதமர் ஷேக் **Fahad Yousuf** தெரிவித்துள்ளார்.

தனியார் நிறுவன பிரதிநிதிகளுடன் ஆலோசனை மேற்கொண்டபின் இதனை அறிவித்த அவர், இத்திட்டத்தின்மூலம், வெளிநாடுகளிலிருந்து குவைத் நாட்டுக்கு சென்று பணிபுரிபவர்களுக்கு அந்நாட்டு குடிமகனின் ஆதரவு கடிதம் கட்டாயம் இல்லை என்று தெரிவித்தார்.

இதன்மூலம், வெளிநாடுகளிலிருந்து வரும் பணியாளர்கள் சுதந்திரமாக குவைத் நிறுவனங்களில் பணிபுரிய முடியும் என்றும் அவர் கூறினார்.

குவைத்தில் பணிபுரியும் இந்திய பணியாளர்களுக்கு இது மிகவும் பயனுள்ளதாக அமையும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

குவைத்தில் பத்து லட்சத்திற்கும் மேற்பட்ட இந்தியர்கள் பணிபுரிந்து வருகிறார்கள்.

முதல்கட்டத்தில், ஒரு வருடத்தில் **750** முதல் ஆயிரம் குவைத் தினார் சம்பளம் பெறுபவர்களுக்கு இந்த விசா திட்டம் செயல்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<<>>>>>

ஆசிய **Cross Country** தடகள சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Harmanjot Singh** வெள்ளிப்பதக்கம் வென்றார்.

ஜப்பானின் **Fukeoka**-வில் இன்று நடைபெற்ற பத்து கிலோமீட்டர் ஓட்டத்தில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

--------------------

பெங்களூருவில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் வைஷ்ணவி அட்கர் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர், **6-3, 6-3** என்ற செட் கணக்கில், தாய்லாந்தின் **Lanlana Tararudee**-ஐ வென்றார்.

----------------

புதுதில்லியில் நடைபெற்றுவரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சித்தாந்த் பான்தியா — பல்கேரியாவின் **Alexander Donski** இணை பட்டம் வென்றது.

ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்த இணை, **4-6, 6-4, 12-10** என்ற செட் கணக்கில், இந்தியாவின் நிக்கி கலியாண்டா — தாய்லாந்தின் **Pruchya Isaro** இணையை வென்றது.

----------------

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான **3**-ஆவது மற்றும் இறுதி மகளிர் டிவென்டி - டிவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா **17** ரன் வித்தியாசத்தில் வெற்றிபெற்று தொடரை கைப்பற்றியது.

அடிலெய்டில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த இந்தியா நிர்ணயிக்கப்பட்ட **20** ஓவரில், **6** விக்கெட் இழப்பிற்கு **176** ரன் எடுத்தது.

**177** ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய ஆஸ்திரேலியா, **20** ஓவரில் **9** விக்கெட் இழப்பிற்கு **159** ரன் மட்டுமே எடுத்து தோல்வியடைந்தது.

மூன்று போட்டிகளை கொண்ட இந்த தொடரில், இந்தியா **2-1** என்ற ஆட்டக்கணக்கில் தொடரை கைப்பற்றியது.

<<<<<<**END**>>>>>